வேலையிலோதான் ஈடுபடுவார்கள். கையிலே உளியையும் சுத்தியலையும் வைத்துச் செதுக்குவார்களா என்பது சந்தேகம் தான். சான்றிதழ்கள் வழங்குவதன்மூலமாக அந்தக் கலை வளரும்.

திரு. கோ. இளங்கோவன் : சிற்பக்கலை பயில்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் பயில்கிறார்கள் ? இதுவரையில் படித்து வெளிவந்த மாணவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டு தோறும் 10 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி ஒரு ஆண்டா இரண்டு ஆண்டா என்கிற விவரக் குறிப்பில்லை, தனிக்கேள்வி போட்டால் தரலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுகிற நேரத்திலே அவர்களுக்காக ஊதியமோ அல்லது உதவித் தொகையோ அளிக்கிறோம். அதைப் போல சிற்பக் கலை பயில்கிற மாணவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறதா ? இல்லையென்றால் இனி மேலாவது உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதோ ஊக்க ஊதியம் இருப்பதாக அறிகிறேன், விவரக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. கு. காமாட்சி : இந்தச் சிற்பக் கலைக்குப் பழைய காலத்திலேயுள்ள மாதிரி உளியும் சுத்தியலும்தான் இப்போதும் இருக்கிறது. அதற்கு நவீன கருவிகள் ஏதாவது கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றிய விவரம் இல்லை.

ரப்பர் சாலைகள்

*724 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் முக்கியமான சாலைகளில் ரப்பர் சாலை அமைப்பது குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப் பட்டதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): நெடுஞ் சாலை ஆராய்ச்சி நிலையம் நிலக்கீல் சாலைகளில் ரப்பர் சேர்ப்பது பற்றி ஆய்வு செய்து சோதனை விளைவுகளை ஓர் ஆய்வகக் குறிப்பாக வெளியிட்டுள்ளது. அது ''நிலக்கீல் சாலைகளில் ரப்பர்'' என்ற தலைப்பில் குறிப்பு எண் 15 ஆக வெளியிடப் பட்டது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தச் சாலையை அமைக்க ஒரு கிலோமீட்டருக்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது? குறைந்த பட்சம் முன்மாதிரியாக சென்னை மாநகரத்தில் அண்ணாசாலையையாவது இரப்பர் சாலையாக மாற்றி யமைக்க ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதற்குண்டான செலவு எவ்வளவு என்பதற்கான புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. ஆய்வகத்தில்தான் இருக்கிறது. ஆனால் இது உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. இந்த ஆண்டு பரி சீலிக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, இந்த இரப்பர் சாலைகள் வெளிநாடுகளில் அதிகமாக இருக்கின்றனவா? இதை நம்முடைய நாட்டிலே போடுவதால் செலவு அதிகம் ஆகிறதா? இதைப் போடுவதால் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறதா? இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று ஆறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, முழுக்க முழுக்க இரப்பரை வைத்துப் போடும் சாலை அல்ல. நாம் ஏற்கனவே போடும் தார் கீலோடு இரப்பர் தூளையும் கலந்து போடுவதாகும். இதனால் செலவு ஆரம்பத்திலே அதிகமாக இருந்தாலும் அதிக நாட்கள், ஆண்டுகள் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது பரிசோதனை நிலையில் தான் இருக்கிறது. இருந்தாலும் பரிசோதனை உற்சாகமூட்டு வதாக இருக்கிறது.

பக்கிங்காம் கால்வாய் கரைகள்

*725 வின—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் பக்கிங்காம் கால்வாயின் கரைகளைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?